[1978 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, 15.9.77 அன்று பாரம் சுமக்கும் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்பட்டு அறிவிப்பு வந்திருக்கிறது. நோட்டீஸ் காலம் எல்லாம் முடிந்துவிட்ட காரணத்தினால் விரைவிலே கூலி நிர்ணயம் ரயில்வே போர்ட்டர்களைப் போல் அல்லாமல் இவர்களுக்கு இன்னும் அதிகமாக இருக்கக்கூடிய வகையில் அறிவிப்பு வர இருக்கிறது. அந்த அறிவிப்பு வந்த பிறகு இந்த வழக்குகள் சுமுகமாகத்தீர்ந்துவிடும், தகராறு இருக்காது என்று உறுதியாக நம்புகிறேன்.

திரு. கா. ந. சண்முகம்: தலைவர் அவர்களே, பயணிகள் தங்குவதற்கு வசதியில்லாமல், பல பகுதிகளில் இருந்து வரும் பயணிகள் பிராட்வே பஸ் நிலையத்தில் அவதிப்படுகிறார்கள். இதற்கு வகைசெய்கிற வகையில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அதைப்பற்றி முறையீடு கொடுத்தால் மெட்ராஸ் மெட்ரோ பாலிடன் டெவலப்மன்ட் அதாரிட்டியைக் கலந்து ஆவன செய்ய முயற்சி செய்யப்படும்.

அரியலூர் நகருக்குக் குடிநீர் வழங்கு திட்டம்

வினா *838 திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் நகருக்கு கொள்ளிடத்தில் இருந்து குடிநீர் வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; அரியலூர் நகருக்குக் கொள்ளிடத்தில் இருந்து குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அதிகம் செலவாகும் எனக் கருதப்படுவதால், ஆழ்துளைக் கிணறுகள் மூலம் குடிநீர் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆராயப்படுகின்றன.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975-ஆம் ஆண்டு அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கொள்ளிடத்தில் இருந்து தண்ணீர் கொண்டுவருவதற்காகத்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அங்கு தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலை வருகிற காரணத்தால், தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து கொள்ளிடத்தில் இருந்து தண்ணீர் கொண்டுவர அரசு முயற்சி செய்யுமா?

1978 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம்நதி அரியலூர் பேரூராட்சியிலிருந்து சுமார் 27 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கொள்ளிடம் நதி நீர் உறுதியாகக் கிடைக்கக்கூடிய நிலையில் இருந்தாலும், இந்நதியில் இருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் அதிகம் செலவாகலாமெனக் கருதப்படுகிறது. ஆகவே இப்பேரூராட்சியின் சுற்றுப்புறங்களில் உள்ள நிலத்தடி நீரை ஆழ்துளைக் கிணறுகள் மூலம் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. நிலத்தடி நீர் ஆய்வுத் துறையினர் நொச்சிக்குளம் கிராமத்தில் அமைத்துள்ள ஆழ்துளைக் கிணறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவது, குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. ஆய்வுக்கு பின்னர் அது அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

திருவெறும்பூர் ஊராட்சியில் அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்

வின * 581 திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

அ) திருவெறும்பூர் ஊராட்சி அரிசன மக்களுக்குப்' நரிக்குறவர்களுக்கும் இலவச வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் உண்டா?

ஆ) ஆம் என்றால், அத்திட்டம் எப்பொழுது அமுல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் தேவராய நேரியில் நரிக்குறவர்களுக்காக ஏற்கெனவே. 1974-75-ம ஆண்டில் 140 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) அரிசன மக்களுக்குக் கட்டித்தருவது பற்றி அடுத்து வரும் கட்டங்களில் 1978-79 பரிசீலிக்கவேண்டும்.

திரு. கூ. ச. முருகேசன்: தலைவரவர்களே, திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் தேவராயநேரியில் நரிக்குறவர்களுக்காக ஏற்கெனவே 1974-75-ம் ஆண்டில் 140 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது மட்டுமல்ல, அங்கே ஒரு பள்ளிக்கூடமும், ஒரு பாலர் பள்ளியும், குடிநீர், வடிகால் வசதிகளும், வானொலி நிலையமும் டாக்டர் கலைஞர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் அமைக்கப்பட்டன. அதேபோல், பழங்கனுங்குடியில் வாழும் நரிக்குறவர்கள் வெயிலிலும், மழையிலும் அல்லல்பட்டுக் கொண்டு இருப்பதால், அப்படிப்பட்ட திட்டங்களை அங்கே செயல்படுத்த அரசு முன்வருமா? அதே போல், அரிசனங்களுக்கு கலைஞர் ஆட்சியில் எங்கள் ஊரில் மற்ற சமுதாயத்தினருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன, அதேபோல் அரிசனங்களுக்கும் அங்கே வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உண்டா?